**செ.வெ.எண்: 42** **நாள்: 18.11.2021**

**நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறக்கூடிய மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறக்கூடிய மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு முழுவதும் கொரோனா பெருந்தொற்று பரவலை முழுமையாக கட்டுபடுத்திட தமிழக அரசு பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் எடுத்து “மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்” நடத்தப்பட்டு வருகிறது.

கொரோனா பெருந்தொற்று நோயிலிருந்து பாதுகாத்துக் கெள்ள தடுப்பூசி ஒன்றே பேராயுதம் என்பதால் 18.11.2021 வியாழக்கிழமை மற்றும் 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை அனைத்து அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையம் மற்றும் 534 சிறப்பு முகாம்களும், மற்றும் (Mobile Vaccination Team) வீடுவீடாக சென்று 20,000 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதை இலக்காக கொண்டு “மெகா தடுப்பூசி முகாம்” நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதனைத்தொடர்ந்து இன்று திருமருகல் ஊராட்சி ஒன்றியம் திட்டச்சேரி பேரூராட்சிக்குட்பட்ட தைக்கால்தெரு, சீயாத்தமங்கை ஊராட்சி கீழத்தெரு மற்றும் திருச்செங்காட்டான்குடி ஆகிய இடங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீடு வீடாகச்சென்று கொரோனா தடுப்பூசி போடப்படுவதையும், திட்டச்சேரி அரசு உயர்நிலைப்பள்ளி, புறா கிராமத்தில் உள்ள பல்நோக்கு கட்டிடம் ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் கொரோனா தடுப்பூசி முகாமினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெறும் முகாம்களில் மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்தோர் மற்றும் நடக்க முடியாத நபர்களுக்கு வீட்டிற்கே சென்று தடுப்பூசி போட சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், விடுபட்டு போன முன்களப்பணியாளர்கள், முதல் தவணை தடுப்பூசி செலுத்தி கொள்ளாதவர்கள் மற்றும் இரண்டாவது தடுப்பூசி தவணை செலுத்திக் கொள்ளவுள்ள நபர்கள் தானாக முன்வந்து தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப. அவர்கள் அன்புடன் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**